**மார்ச் – 22**

# TNPSC துளிகள்

- சிந்து சமவெளி நாகரிகத்தின் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ தளங்களின் மீதான அகழ்வாராய்ச்சியில் மிகவும் முக்கியப் பங்கினை வகித்த பிரிட்டிஷ் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சர். ஜான் ஹூபர்ட் மார்ஷலின் சிலையைச் சென்னை எழும்பூரில் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- தெரு நாய்களால் வளர்ப்பு விலங்குகள் /பறவைகள் ஏதேனும் கொல்லப்பட்டால் அந்த விவசாயிகளுக்கு, ஒரு மாடுகளுக்கு 37,500 ரூபாயும், செம்மறி ஆட்டிற்கு 6,000 ரூபாய் மற்றும் ஒரு கோழிக்கு 200 ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீடு வழங்க உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- புதுச்சேரி ஆரோவில் அறக்கட்டளையானது, சுற்றுச்சூழல் ஏற்பு இசைவு இல்லாமல் புதுச்சேரியில் கட்டமைக்கப்படுவதற்காக வேண்டி முன்மொழியப்பட்டுள்ள நகரக் கட்டமைப்புத் திட்டத்தினை தொடர்வதற்கு தடை விதித்த சென்னை தேசியப் பசுமை தீர்ப்பாயத்தின் 2022 ஆம் ஆண்டு உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ், பசுமைக் கழிவுகளைச் மிக நன்கு செயல்முறையாக்கும் இந்தியாவின் முதலாவது ஆலையை நிறுவுவதன் மூலம் நிலையான கழிவு மேலாண்மையில் இந்தூர் நகரம் மற்றொரு மைல்கல்லை அடைய உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு கபடி உலகக் கோப்பை போட்டியானது, இங்கிலாந்தில் தொடங்க உள்ளது என்பதோடு இது ஆசியாவிற்கு வெளியே வேறொரு கண்டத்தில் நடைபெறும் முதல் போட்டியாகும்.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் விசாகப்பட்டினத்தில் இந்தியாவிற்கும் பிரான்சிற்கும் இடையே 23வது 'வருணா' இருதரப்பு கடற்படைப் பயிற்சி நடைபெற்றது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சிலஹல்லா நீர்மின் நிலையம்




- நீலகிரியின் மிகப் பலவீனமான சூழலியலைக் கருத்தில் கொண்டு சில்ஹல்லா என்ற நீரேற்று நீர்மின் நிலைய மின்னாற்றல் சேமிப்புத் திட்டத்தினை உடனே கைவிடுமாறு

சில்லஹல்லா சுற்றுச்சூழல் சமூகப் பாதுகாப்பு சங்கம் (SESPA) வலியுறுத்தியுள்ளது.

- ❖ முன்மொழியப்பட்ட இந்த நீர்மின் நிலையமானது, 10 கி.மீ நீரேற்றுக் குழாயுடன் கூடிய இரண்டு அணைகளைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு மேலும் இது 25 கிராமங்களின் நடுவில் உருவாக்கப்பட உள்ளது.
- ❖ சுமார் 1,000 ஏக்கர் வேளாண் நிலங்களும் 500 ஏக்கர் வன நிலங்களும் இதனால் நீரில் மூழ்க வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## பெருநகர சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை 2025-26




- ❖ பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) ஆனது, வரி மற்றும் வர்த்தகம் மீதான உரிமக் கட்டணங்களுக்கான QR குறியீடு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது 8,267.17 கோடி ரூபாய் என்ற அளவில் மொத்த வரவினையும் 8,404.7 கோடி ரூபாய் என்ற அளவில் மொத்தச் செலவினையும் கொண்டுள்ளது.
- ❖ இதன் மன்ற உறுப்பினர்களின் மன்ற/வார்டு மேம்பாட்டு நிதி ஆனது ஒரு மன்றத்திற்கு 50 லட்சம் ரூபாயிலிருந்து 60 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்.
- ❖ மேயரின் சிறப்பு மேம்பாட்டு நிதியானது 3 கோடி ரூபாயிலிருந்து 4 கோடி ரூபாயாக உயர்த்தப் படும்.
- ❖ இங்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் காயமடைந்த செல்லப் பிராணிகளுக்கான ஒரு சிறப்பு அவசரச் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.
- ❖ பெருநகர சென்னை மாநகராட்சியின் தற்போதைய விலங்குப் பிறப்புக் கட்டுப்பாடு மையங்களுக்குள் தலா 15 லட்சம் ரூபாயில் 10 புதிய கால்நடை மருத்துவமனைகள் கட்டப் படும்.
- ❖ ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்துவதற்காகச் சிறப்பு வகுப்புகளை நடத்தச் செய்வதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.
- ❖ இதில் போட்டித் தேர்வு விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் மாணவர்களுக்கான பல ஊக்கத் தொகைகளுக்கு 40.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.
- ❖ வாட்ஸ்அப் அடிப்படையிலான தகவல் தொடர்பு மூலம் குடிமக்கள் சேவைகள், குறை தீர்ப்புச் சேவைகள் மற்றும் தானியங்கியில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs)

ஆகியவற்றை எளிதாக்குவதற்காக 4.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கம்ப இராமாயண திருவிழாக்கள்

- ஒன்றிய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தென் மண்டலக் கலாச்சார மையம் (SZCC) ஆனது, 'கம்ப இராமாயண' பாராயணங்களின் வாய்மொழி மரபையும் அதன் பரந்த கலாச்சாரத் தாக்கத்தையும் புதுப்பிக்கும் நோக்கில் ஒரு விரிவான முன்னெடுப்பினைத் தொடங்குகிறது.
- கம்பரின் பிறப்பிடமான மயிலாடுதுறை மாவட்டத்தின் தேரழுந்தூரில் உள்ள கம்பர் மேடுவில் ஒரு வார கால விழாவை நடத்த அது திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திருவிழாவில் 'கம்ப இராமாயணத்தின்' தொடர்ச்சியான சில பாராயணங்கள், நடன நாடகங்கள் மற்றும் அறிவார்ந்த விவாதங்கள் இடம் பெறும்.




## தேசியச் செய்திகள்

### NIDAR சவால்




- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது, ஆளில்லா வாகனங்கள் கூட்டமைப்பு இந்தியா (DFI) நிறுவனத்துடன் இணைந்து, ஆளில்லா வாகனங்களின் பயன்பாடு மற்றும் ஆராய்ச்சிக்கான தேசியப் புத்தாக்க சவால் (NIDAR) என்ற ஒரு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது 'SwaYaan - ஆளில்லா வாகன அமைப்புகளில் மனித வள மேம்பாட்டிற்கான திறன் மேம்பாடு' முன்னெடுப்பின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களின் தேவையினை ஆராய்ந்து வழங்குவதன் மூலம் பேரிடர் மேலாண்மைக்குப் பங்களிக்கும் வகையில் ஆளில்லா வாகனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## சன்சத் பாஷினி முன்னெடுப்பு




- மக்களவை செயலகம் மற்றும் MeitY ஆகியவை சன்சத் பாஷினி முன்னெடுப்பினை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பன்மொழி ஆதரவை மேம்படுத்துவதற்கும், பாராளுமன்ற செயல்பாடுகளை மிகவும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும், பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் பதிவுகளின் மாபெரும் காப்பகங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் வேண்டி அதிநவீன செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் முக்கிய விவாதங்கள், குழுக் கூட்டங்கள் மற்றும் செயல்பாட்டு நிரல் கோப்புகள் உள்ளிட்ட பாராளுமன்ற உள்ளடக்கத்தினைப் பல்வேறு பிராந்திய மொழிகளில் நிகழ் நேரத்தில் மொழிபெயர்க்க உதவும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மொழி பெயர்ப்பை இது கொண்டிருக்கும்.
- இது அனைத்து குடிமக்களும் ஆவணங்களை அணுகக் கூடியதாக மாற்றும்.

## நான்கு கருத்துரு சார்ந்த மையங்கள்- தேசிய துளிமத் திட்டம்

- தேசியத் துளிமத் திட்டம் என்பது துளிமத் தொழில்நுட்பத்தில் பெருமளவு அதி நவீன முன்னேற்றங்களை மேற்கொள்ளும் ஒரு நாடு தழுவிய முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 17 மாநிலங்கள் மற்றும் 2 ஒன்றியப் பிரதேசங்களில் 14 தொழில்நுட்பக் குழுக்களை ஒன்றிணைத்து நான்கு கருத்துரு சார் மையங்கள் (T-Hubs) அமைக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள முன்னணி நிறுவனங்களில் நான்கு கருத்துரு சார் மையங்கள் நிறுவப் பட்டுள்ளன:
    - இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc) பெங்களூரு
    - புது டெல்லியின் தகவல் தொடர்பு மேம்பாட்டுக் கல்வி மையத்துடன் இணைந்து

சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT)

- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT), மும்பை
- இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT), புது டெல்லி.




## சர்வதேசச் செய்திகள்

### மெக்சிகோவின் அரசியலமைப்பு சீர்திருத்தம்





- மெக்சிகோ நாட்டு அரசானது, தனது அரசியலமைப்பைத் திருத்தி, உள்நாட்டுச் சோள வகையினை தேசிய அடையாளத்தின் ஓர் அங்கமாக அங்கீகரித்து, மரபணு மாற்றப் பட்ட (GM) விதைகளை நடுவதைத் தடை செய்துள்ளது.
- இந்தப் பயிர் ஆனது சுமார் 9,000 ஆண்டுகளுக்கு முன்பு மெசோ அமெரிக்க நாட்டு விவசாயிகள் டீயோசின்டே எனப்படும் காட்டுப் புல் வகையினை வளர்த்ததன் மூலம் மெக்சிகோவில் தோன்றியது.
- அப்போதிலிருந்து இந்தச் சோள வகையானது மெக்சிகோ நாட்டவரின் வாழ்க்கையின் முக்கிய உணவாக உள்ளது.

- 1990 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் 3.1 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த சோள இறக்குமதி ஆனது, இன்று சுமார் 23.4 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

## உலகளாவியக் கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் நிலை குறித்த அறிக்கை 2024 - 2025

- கட்டிடம் மற்றும் கட்டுமானத் துறையின் உமிழ்வு ஆனது, 2020 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக 2024 ஆம் ஆண்டில் அதிகரிக்காமல் உள்ளது.
- இந்த அறிக்கையானது, ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்திற்கான உலகளாவிய பருவநிலை என்ற கூட்டணியால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் கட்டிடத் துறையின் உமிழ்வு சீராகியுள்ளது.
- கட்டிடங்களின் ஆற்றல் பயன்பாட்டுத் தீவிரம் ஆனது சுமார் 10 சதவீதம் குறைந்து உள்ளது.
- கூடுதலாக, இறுதிக் கட்ட எரிசக்தி தேவையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்களிப்பு விகிதம் ஆனது சுமார் 5 சதவீதம் அதிகரித்துள்ளது.
- சிமெண்ட் மற்றும் எஃகு போன்ற கட்டுமானப் பொருட்கள் உலகளாவிய உமிழ்வுகளில் சுமார் 18 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன மற்றும் மிகக் கணிசமான அளவில் கழிவுகளை உருவாக்குகின்றன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இளஞ்சிவப்பு காய்ப்புழு பாதிப்பு எதிர்ப்புத் திறன் கொண்ட GM பருத்தி வகை


- லக்னோவில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR-NBRI) அறிவியலாளர்கள் உலகின் முதல் மரபணு மாற்றப்பட்ட (GM) பருத்தி வகையினை உருவாக்கியுள்ளதாகக் கூறியு உளனர்.
- இது இளஞ்சிவப்புக் காய்ப்புழு (PBW) பாதிப்பிற்கான முழு எதிர்ப்புத் திறன் கொண்டது.
- PBW என்பது இந்தியா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் பருத்திப் பயிரைப் பாதிக்கும் ஒரு பேரழிவு தரும் பூச்சியாகும்.
- 2015-2016 ஆம் ஆண்டு முதல் மகாராஷ்டிரா, தெலுங்கானா, கர்நாடகா, குஜராத்,

ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்திய மற்றும் தென்னிந்தியாவில் உள்ள பிற பருத்தி வளரும் பகுதிகளில் PBW தொற்று பதிவாகியுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## Future of Free Speech அமைப்பின் குறியீடு 2025




- அமெரிக்காவின் ஒரு சுயாதீனச் சிந்தனைக் களஞ்சியமான Future of Free Speech என்ற அமைப்பானது, 'Who in the World Supports Free Speech?' என்ற ஒரு தலைப்பிலான இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- பேச்சுச் சுதந்திரத்திற்கான ஆதரவு குறித்த கேள்வி தொடர்பாக கணக்கெடுக்கப்பட்ட 33 நாடுகளில் இந்தியா 24வது இடத்தைப் பிடித்தது.
- இந்தக் குறியீட்டில் நார்வே மற்றும் டென்மார்க் முதலிடத்தில் உள்ளன.
- இந்தோனேசியா (56.8), மலேசியா (55.4), மற்றும் பாகிஸ்தான் (57.0) ஆகியவை இதில் மதிப்பெண்களின் அடிப்படையில் மிகப்பெரியதொரு அளவில் முன்னேற்றங்களைக் கொண்டு உள்ளன.
- அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் 2021 ஆம் ஆண்டிலிருந்து

பேச்சுச் சுதந்திர ஆதரவில் சரிவைக் கண்டுள்ளன.

## சர்வதேச கடன் அறிக்கை 2024


- 2024 ஆம் ஆண்டு சர்வதேச கடன் அறிக்கையானது உலக வங்கியால் வெளியிடப் பட்டு உள்ளது.
- மிகக் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் (LMICs) கடன் மதிப்பானது, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 8.8 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளன என்பதோடு இது 2020 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 8% அதிகமாகும்.
- வெளிநாட்டுக் கடன் ஆனது 18% அதிகரித்து 1.1 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது.
- இதன்படி 2023 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர்களிடமிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி விகிதங்கள் 4 சதவீதத்திற்கும் அதிகமாக இரட்டிப்பாகியுள்ளன.
- வட்டி விகிதங்கள் ஆனது சுமார் 6% ஆக உயர்ந்துள்ளன, இது 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக அதிகம் ஆகும்.
- இந்தியாவைப் பொறுத்தவரை, வெளிநாட்டுக் கடன் 31 பில்லியன் டாலர் அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் சுமார் 646.79 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளதாக அறிக்கை குறிப்பிடுகிறது.
- வட்டி வழங்கீடுகள் ஆனது, 2022 ஆம் ஆண்டில் 15.08 பில்லியன் டாலர்களிலிருந்து 2023 ஆம் ஆண்டில் 22.54 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளன.
- நீண்ட காலக் கடன்கள் 7% அதிகரித்துள்ளதோடு, குறுகிய காலக் கடனில் சிறிது சரிவு ஏற்பட்டுள்ளது.

**INDIA**

*(US$ million, unless otherwise indicated)*

| Summary | 2023 |
|---|---|
| Total external debt stocks | 646,787 |
| External debt stocks as a % of exports | 80 |
| External debt stocks as a % of GNI | 18 |
| Debt service as a % of exports | 10 |
| Debt Service as a % of GNI | 2 |
| Net Financial Flows, debt and equity | 33,421 |
| Net debt inflows | 33,421 |
| Net equity inflows | 46,947 |
| GNI | 3,497,822 |
| Population (million) | 1,429 |

Figure 2 Average terms on new debt commitments from official and private creditors




# மாநிலச் செய்திகள்

## சிஷ்டாச்சர் பிரிவு

- டெல்லி காவல்துறையானது, 'பெண்களைக் கேலி செய்வதைத் தடுத்தல்' படைகள் என்றும் அழைக்கப்படுகின்ற 'சிஷ்டாச்சர்' படைப் பிரிவினைத் தொடங்க உள்ளது.
- இது தேசிய தலைநகரில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த முக்கிய முன்னெடுப்பானது, "தனிநபர்கள் மீது தனிப்பட்ட அல்லது கலாச்சார ஒழுக்கத்தைத் திணிப்பதை விட, சட்டத்தை அமல்படுத்துவதில் கவனம் செலுத்தும்".
- ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறை உதவி ஆணையர் (ACP) தலைமையிலான படைப் பிரிவுகள் நிறுவப்படும்.




## ஹமர் மற்றும் சோமி பழங்குடியினர்

| | |
|---|---|
| Kuki-Zo | Kuki-Zo highlights only Kuki. The exclusive use of "Kuki-Zo" marginalizes the distinct identities of the Hmar and Zomi people. This parallels the representation of "Tangkhul-Naga," which implies that the Tangkhul are subsumed under the Naga identity.<br><br>Kuki-Zo can fall into equating the Kuki with their ancestor Zo. |
| Kuki-Chin<br>Chin-Kuki | Kuki-Chin and Chin-Kuki remove the Hmar and the Zomi from the spotlight. Chin is another colonial terminology used against the Zo people in the present day Myanmar. |
| Kuki-Zo-Hmar/<br>Kuki-Hmar-Zo | These identities were recently used which sought to please the Hmar while sidelining the Zomi. |

- மணிப்பூரில் அமைதியைக் கொண்டு வருவதற்காக என ஹமர் இன்புய் மற்றும் சோமி சபை ஆகியவை இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டுள்ளன.
- ஹமர் பழங்குடியினர் பெரிய சின்-குகி-மிசோ இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- சோமிகள் மிசோ, குகி மற்றும் சின் சமூகங்களை உள்ளடக்கிய மாபெரும் சோ இனக் குழுவின் அங்கத்தினராவர்.
- ஹமர் குக்கி-சின்-மிசோ மொழிக் குடும்பத்தின் ஒரு பகுதியாக உள்ள ஹமர் பேச்சு வழக்கு மொழியினைப் பேசுகின்றனர்.
- சோமிகள் குகி-சின் மொழியியல் குடும்பத்திற்குள் உள்ள குகிஷ் மொழி பேச்சு

வழக்குகளில் ஒரு மொழியினைப் பேசுகின்றனர்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## 4வது உலகளாவியப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புத் தலைவர்கள் மாநாடு

- இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (NSA), 4வது உலகளாவியப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புத் தலைவர்கள் தலைமையேற்று நடத்தினார்.
- இதில் ஐங்கண் கூட்டணியின் தலைவர்கள் உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகள் பங்கேற்றனர்.
- இந்த உயர்மட்ட வருடாந்திரப் பாதுகாப்பு பேச்சுவார்த்தையானது, 2025 ஆம் ஆண்டு ரைசினா பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது வருடாந்திர முனிச் /மி யூனிக் பாதுகாப்பு மாநாடு மற்றும் சிங்கப்பூரின் ஷாங்க்ரி-லா பேச்சுவார்த்தையின் மாதிரியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★